# GLPS

# KEERAMPARA

# Academic Master Plan

## 2025-26

Lower Primary School
Pin-678 556
Keerampara, Attappady P.O

முன்னுரை :-

சரிவான மேம்படுத்தப்பட்ட கல்விக் கொள்கையின் நோக்கங்களை அடைவ-
-தற்காக PTA, SMC, SRG, போன்ற கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலும் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களின் அனுபவங்களின் அடிப்படையிலும் GLPS கிராம்பாறைப் பள்ளியின் 2025-26 கல்வி ஆண்டிற்கான செயல்திட்டங்கள் தொகுக்கப்
-பட்டது.

செயல்திட்டங்கள் :

* 2025 - 26 - ஆம் கல்வியாண்டில் NAS, SAS போன்ற தேர்வுகளில் மாணவர்களுக்கு கூடுதல் பயிற்சி அளிக்கவும், கல்வி மேம்படுத்தவும் செயல்திட்டம் வகுக்கப்பட்டது.

* மாணவர்களின் முன் விவரங்களை சேகரித்தல்
* வகுப்புத் திட்டமிடுதல்
* மாணவர்களை மன அளவில் - தேர்விற்காக தயார் செய்தல்
* தகவல் தொழில் நுட்பத்தை சிறப்பாக பயன்படுத்துதல்
* தேர்வுத் தாள்களை பரிசோதித்து அறிக்கை தயாராக்கி மதிப்பிடுதல்.

* LSS தேர்வுகளில் அனைத்து மாணவர்களையும் உயர்ந்த கல்வித் தரத்துடன் பங்கு பெற செய்தல்.

* திறன்கொண்டாட்டங்கள், நடத்துவது.
* CPTA, MPTA, SMC கூட்டங்கள் கூடுதல்
* கலை, விளையாட்டு, தொழில் போன்ற பயிற்சிகள் வழங்குதல்.
* கலை நிகழ்ச்சிகளுக்கு தேவையான பயிற்சிகள் வழங்குதல்.
* பஞ்சாயத்து அளவிலான "ஆசிரியர்-சங்கமங்களில்" பங்கு எடுத்தல்
* எல்லா மாணவர்களுக்கும் குறைந்தபட்ச நரம் உறுதி செய்தல்
* கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கு கூடுதல் பயிற்சி அளிப்பதற்கான திட்டமிடல்.
* ICT பயன்படுத்தி மாணவர்களுக்கு பாடம் திட்டமிடுதல்.
* பெற்றோர்களுக்கு தேவையான பயிற்சி வகுப்புகள், பணிமனைகள்.

* கூடுதல் பயிற்சிகள் கொடுத்தல்
* ஜீலை மாதம் முதல் LSS தேர்வு-க்கான பயிற்சி அளித்தல்
* கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் கூடுதல் பயிற்சி
* மாதிரி பயிற்சி அளித்தல்
* முன் வருட வினாத்தாள்கள் வைத்து பயிற்சி வழங்குதல்.

* Pre-test மற்றும் Post-test எல்லா வகுப்புகளிலும் நடத்துவதற்கான செயல்திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டது.
  * வினாத்தாள்கள் தயாரித்தல்
  * சிறப்பு பயிற்சி வழங்குதல்.

* இக்கல்வியாண்டிற்கான Club-கள் உருவாக்குதல். English club, Eco Club, Health club, Arts club, Science Club, Sports club.....etc.

* புதிய பாடத்திட்டத்திற்கான பாடபுத்தகங்கள் அறிமுகம் செய்தல் மற்றும் பழக்கப்படுத்து -வதற்கான திட்டம் வகுத்தல்.

* கல்வி செயல்திட்டத்தை மேம்படுத்த PTA SMC, வார்டு உறுப்பினர், பஞ்சாயத்து போன்றவர்களின் உதவியைப் பெறுதல்.

* தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர்களுக்கான அனைத்துப் பயிற்சிகளிலும் பங்கு பெறுதல்.

* மோனிட்டரிங் சிஸ்டம் டிஜிட்டலையில் முறையில் மோனிட்டரிங் செய்தல்.

* காரினர் PTA, வீடு சந்தித்தல் என்பன நடைமுறைப்படுத்தி கல்வியின் தரத்தை மேம்படுத்தல்.

தமிழ் :

அனைத்து குழந்தைகளுக்கும்
எழுதவும் வாசிக்கவும் பயிற்சி அளித்தல்

* பின்தங்கிய மாணவர்களைக் கண்டறிந்து படிப்பில் வலுப்படுத்துதல்
* வாசிப்பு அட்டைகள் கொடுத்து வாக்கியம் அமைத்தல்
* படக்கதை வாசிப்பு
* கதை புத்தகம் வழங்குதல்
* மாற்றுத்திறனாளிக்கான சிறப்பு பயிற்சிகள்.
* வகுப்பு வாசிப்பு இயக்கங்களை உருவாக்குதல்
* பள்ளி நூலகம் புதுப்பித்தல்.
* புத்தக விநியோகம்
* பிறந்த நாள் புத்தக சேகரிப்பு
* செய்தித்தாள் வாசிப்பு
* செய்தி தயாரிப்பு
* பொதுமக்களிடமிருந்து புத்தக சேகரிப்பு.

சூழ்நிலையியல்

சுற்றுப்புற பாதுகாப்பை வலியுறுத்தும் நடவடிக்கைகள் பள்ளியை சுற்றியும் உள்ள இடங்களை பராமரித்தல்.

* பள்ளியை பசுமை ஆக்குதல்
* நீர் பாதுகாப்பு
* Plastic இல்லாத - கழிவுகள் இல்லாத பள்ளி உருவாக்குதல்
* இயற்கையை அறிய - களப்பயணம்
* பசுமைக் கழகம் உருவாக்குதல்
* போதைப்பொருள் எதிர்ப்பும் பள்ளி என்ற கருத்தின் அடிப்படையில் பெற்றோர்-களுக்கான விழிப்புணர்வு வகுப்புகள்.
* பள்ளியில் பல்லுயிர் தோட்டம் உருவாக்கு-தல்.
* உடலுக்கு ஆரோக்கியத்துடன், உணவியல் நிபுணரின் வகுப்புகள்
* உள்ளூர் கலை வடிவங்கள் மற்றும் கலைஞர்கள் பற்றிய நேர்காணல்
* அறிவியல் ஆய்வகம், அறிவியல் இதழ்கள் உருவாக்குதல்.

ஆங்கிலம் :

அனைத்து குழந்தைகளுக்கும் பாடத்திட்டத்தில் இலக்காகக் கொண்ட அனைத்து ஆங்கில கற்றல் நோக்கங்களையும் அடைய செய்தல். ஹலோ இங்கிலீஷ் திட்டத்தில், பின்தங்கிய மாணவர்களுக்கு பயிற்சி அளித்தல். படங்களின் உதவியுடன் எழுத்துக்களையும் வார்த்தைகளையும் கண்டறிதல். வாசிப்பு அட்டை செய்தல். பள்ளிக்கூடத்தில் தினமும் புதிய ஐந்து வார்த்தைகள் அறிமுகம் செய்தல். ஆங்கிலத்தில் அகராதி, பத்திரிக்கைகள் தயாரித்தல். அவரவர் வகுப்பிற்கு ஏற்ற சிறந்த செயல்பாடுகள் வழங்குதல்.

சாணிநம் :

அன்றாட வாழ்வில் உள்ள அனைத்து சிக்கல்களையும் தீர்க்க குழந்தை-களை ஊக்குவித்தல். கனசதுர கட்டைகளை வைத்து கணித விளையாட்டுகள் செயல்படுத்தல். எண் பாடல், எண் அட்டை, எண் படங்கள் இட மதிப்பு பாக்கெட், அபாக்கஸ், மேஜிக் சதுரங்கள் போன்ற பல்வேறு முறைகள் மூலம் கணித கருத்துக்களைக் கற்பித்தல். பின் தங்கிய மாணவர்களுக்கு கூடுதல் பயிற்சி வகுப்புகள். சிறப்பு ஆசிரியர்கள் உதவியுடன் மாற்றுத்திறனாளிகளுக்கு வகுப்பு நடத்துதல், கணித இதழ்கள், வினாடி-வினாக்கள், கணித புதிர்கள் வழங்குதல், கையால் கணக்கீடுகளை செய்தல், மெட்ரிக் அளவீடுகளை அறிந்து கொள்ளுதல், கடிகாரம் செய்தல் போன்ற வளர்ச்சி உட்படுத்தக் கூடிய நிகழ்ச்சிகளை உட்படுத்துதல்.

# சிறப்புப் பணிகள்

அகாதமிக் செயல்களில் நமது பள்ளி திட்டமிட்டு செயல்படுத்த கொண்டிய சில சிறப்புச் செயல்பாடுகளை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(i) மாதந்தோறும் ஒரு 'பள்ளி கிராமம்'.

பள்ளியின் முக்கியத்துவம் என்பது இருக்க வேண்டும் என்பதை பரிசீலித்து அந்த நோக்கத்தை நனவாக்கும் வகையில் ஒரு மாதம் ஒரு பகுதியை 'பள்ளி கிராமமாக' மாற்ற வேண்டும் BRC, CRC, IEDC ஆசிரியர்களின் உதவியுடன் செயல்படுதல் மாதாந்திர செயல்பாடுகளை ஆவணமாக்குதல்

(ii) திரை நடவடிக்கைகளை ஆவணப்படுத்துதல்.

திரை செயல்கள் முன்னேற்றத்தை திட்டமிடல். LCD பயன்படுத்தி தயார் செய்தல்.

(iii) உள்ளாட்சி அமைப்புகளின் ஒத்துழைப்பு தேவை.

௨ கி.மீ சுற்றில் உள்ள பள்ளி தேவையை பூர்த்தி செய்ய உள்ளாட்சி அமைப்புகள் ஒத்துழைப்பு பெற வேண்டும்.

முடிவுரை:

விரிவான மேம்படுத்தப்பட்ட கல்விக் கொள்கையின் நோக்கங்களை அடைவதற்கு, வருடாந்திர திட்டத்தின் மூலம் செயல்பாடுகளை தீர்மானித்து, இதன் மூலம் குழந்தைகளின் கல்வி தரத்தை மேம்படுத்த தேவையான தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

SELVARAJ.M
HEADMASTER
GLPS KEERAMPARA
ATTEMPATHY P.O
PALAKKAD-678 558
PEN: 224551